

இரவுக் கழுகுகள்
ராகா
காமிக்ஸ்
இதழ் 7
படக்கதை

ரேகா காமிக்ஸ்

# இரவுக் கழுகுகள்

கதை: மஹேகரன் படம்: ஜெ...




ரேகா பப்ளிகேஷன்ஸ்
41, போர்ட் 'B' தெரு
பெங்களூர் - 560 002
தொலை பேசி : 6017


வழக்கம் போல் ஒரு நாள் இரவில் ரிப் போக் கட்டிடத்தைச் சுற்றி வருகிறான். அப்போது கட்டிடத்தின் பின்புறக் கதவு திறந்திருக்கிறது-
வாட்ச்மேன் இதைப் பூட்ட மறந்து விட்டானா?.. அல்லது...
உள்ளே ஒரு துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்கிறது-
சரிதான்!.. உள்ளே ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது.


உள்ளே பாய்ந்து ஓடுகிறான் கிரி—
பணம் இருக்கும் பாதுகாப்பறை யிலிருந்துதான் சத்தம் வந்தது...
அங்கே பாதுகாப்பு அதிகாரி—
மிஸ்டர் கிரி! இந்தத் திருட்டுப் பயல் பூட்டை உடைத்து உள்ளே வந்திருக் கிறான்.


இவன் ஏதோ அமிலம் போட்டுப் பூட்டை உருக்கி விடுகிறான்..
நான் சந்தேகப் பட்டு உள்ளே நுழைந்த சில விநாடிகளுக்கு முன்புதான் இவன் நுழைந்திருக் கிறான்..


இவன் சுட்டபோது சட்டென்று பாய்ந்து இவன் கையைப் பிடித்து ஆளை மடக்கினேன்.


ஒரு நிமிடம் விட்
டிருந்தாலும் பணப்
பெட்டியுடன் ஓடியிருப்..
..ஆ.. கிரி உன்
பின்னால்.. உஷார்!
ஆஹா
அதற்குள்—
அம்மா!
நான் ஒரு
வன் இருக்கி
றேன், தம்பி!


கிர் சற்றும் நிலை தடுமாறி...
கொள்ளை யடிக்க ஒருவன் தான் வந்திருப் பான் என்று நினைத்தது தவறு!
கிர் கையிலிருந்து பறித்த துப்பாக்கி வெடித்து முதல் கொள்ளைக் காரனைத் துளைத்தது—
ஆ!
டுமீல்!


கிரியைத் தாக்கியவன் சட்டென்று பணப்பெட்டியை எடுத்துக் கொண்டு ஓட...
கிரி தன்னைச் சுதா ரித்துக் கொண்டு எழுந்தான் —
செக்யூரிட்டி!.. நீ அடிபட்டவனைப் பார்த்துக்கொள்.. அந்தத் திருடனை நான் விரட்டிப் பிடிக்கிறேன்.


பாய்ந்து வெளியே வந்து தன் காரைக் கிளப்பி முன்னே சென்றுவிட்ட காரைப் பின்தொடர்கிறான் —
பணப்பெட்டி யுடன் எங்கே போய்விடுகிறாய், பார்க்கிறேன்..



கொள்ளைக்காரனின் கார் ஏதோ கோளாறு காரணமாக வேகம் இழந்து கொண்டே வந்து —
அடடா, நின்றே விட்டது!



பெட்ரோல் காலி... இறங்கி ஓட வேண் டியதுதான்..
கார் புக முடியாத சந்துக் குள் ஓடி நுழைகிறான்—
உன்னை எவ்வளவு சீக்கிரம் பிடிக் கிறேன் பார். உனக்கு பணப்பெட்டி சுமை ஒன்று இருக்கிறது.. எனக்கு அது இல்லை!


அவன் மிக நெருங்கி வந்துவிட்டான்.. ஏதாவது செய்தாக வேண்டும்..
இவனிடம் மாட்டிக் கொள்வதைவிட, பணத்தை விட்டு விட்டு ஓடி விடலாம்... பணத்தை விட உயிர் முக்கியம்!


திடீரென்று அந்தக் கொள்ளைக்காரன், பணப்பெட்டியை கிரியின் கால்களை நோக்கி வீசி எறிந்தான் —
உனக்குப் பணம் தானே வேண்டும்? இதோ எடுத்துக் கொள்...
பெட்டி காலில் தடுக்கி கிரி கீழே விழுந்த போது —
துடிப்பயல் தப்பிவிட்டான். சரி பணப்பெட்டியாவது கிடைத்ததே. பேங்க் பணத்தைக் காப்பாற்றுவதும் என் கடமைதானே


கிரி பெட்டியைத்
திறந்து பார்க்கிறான் -
ஓ! எவ்வளவு
பணம்!
சுமார் ஐம்பது
லெட்சமாவது இருக்கும்..


வாழ்க்கையில் போராடி
அங்குலம் அங்குலமாக
முன்னேறும் கிரிக்கு
இந்தப் பெரிய தொகை
மலைப்பைக் கொடுத்தது -
மீதமுள்ள
வாழ்க்கை
முழுவதையும்
உல்லாசமாகக்
கழிக்கக்கூடிய
தொகை


அந்தத் துப்பறியும் வீரனின் நேர்மையான உள்ளத்தில் சைத்தான் புகுந்துகொண்டது. பணப்பெட்டியுடன் பேங்குக்குப் போகாமல் ஒதுக்குப்புறமான பகுதியில், ஓட்டலில் அறை எடுத்து தங்குகிறான் —
நான் இந்தப் பணத்தை எடுத்துக் கொண்டால் யாருக்கும் என்மீது சந்தேகம் வராது. கொள்ளைக்காரன் என்னிடம் பிடிபடாமல் தப்பி ஓடிவிட்டதாக நினைத்துக் கொள்வார்கள்...
நானா இந்தப் பணத்தை எங்காவது பதுக்கி வைத்து விட்டு பேங்க் பக்கம் போய் கொள்ளைக்காரன் தப்பி ஓடிவிட்டதாகச் சொல்லி விடவேண்டியதுதான்!


மறுநாள் –
சில மாதம் கழித்து கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைச் செலவிடலாம். நான் காதலிக்கும் மதுமதியைக் கல்யாணம் செய்து கொண்டு தேன் நிலவுக்காக அமெரிக்கா போய்விடலாம்!



தற்செயலாகக் கிரி ஜன்னல் வழியே பார்த்த போது–
ஆ... அவன்.. அவன் என்னிடம் பணப்பெட்டியை வீசிய கொள்ளைக் காரன் அல்லவா?


நான் இங்கே தங்கி இருப்பதை எப்படியோ கண்டுபிடித்து வந்திருக்கிறான்.. இவனுடைய நோக்கம் என்னிடமிருந்து இந்தப் பணத்தை அடித்துப் பறிப்பதுதான்..
இவனுக்குத் தெரியாமல் இன்றிரவே இங்கிருந்து நழுவிவிட வேண்டும்.. ..ம்...


ஓட்டல் பின்புறப் பாதையாக
நழுவிய கிரி பணப் பெட்டியுடன்
படகுத்துறையை அடைந்து
ஒரு மோட்டார்ப் படகை மூன்று
நாட்களுக்கு வாடகைக்கு
எடுத்துக் கொண்டான் –
சார்.. படகைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பது உங்கள் பொறுப்பு!
சரி!



அந்தக் கொள்ளைக் காரனைச் செம்மை யாக ஏமாற்றி விட்டேன்!



நாலு நாட்களுக்கு அருகிலுள்ள போலாத் தீவில்போய் தங்கி விட்டுத் திரும்பி நகருக்கு வந்து, பேங்கில் திட்டப்படி பேசிக் கொள்ளலாம்!
அவனுடைய சிந்தனையும் சில நிமிடங்களே நீடிக்கிறது. ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பியவன்—
ஒரு பெரிய மோட்டார் படகு.. நம்மை ஏன் தொடர்கிறது? ஓஹோ! அந்தப் பயோலிக் கொள்ளைக்காரன் அதில் வருகிறானே?


அந்தப் பெரிய படகு சில நிமிடங்களில் கிரியின் படகை மடக்கிவிடுகிறது—
ஹும்.. அந்தப்
இந்தச் சக்தி சேகரிடமிருந்து எவனும் தப்ப முடியாது தம்பி!
உனக்கு எப்படி..?



பணப்பெட்டியை உன்னிடம் வீசிய நிமிடத்திலிருந்து உன்னைக் கவனித்துக் கொண்டிருக் கிறேன்!
நீ பேங்கில் கொள்ளையடித்தவன். உன்னைப் போலீஸில் ஒப் படைக்க என்னால் முடியும்..



சும்மா இரு அப்பனே! இப்போது உனக்கே போலீசிடம் செல்லப் பயம் தான்.. ஹ...ஹ..!
உளறாதே! நான் ஒரு துப்பறிவாளன். எனக்கு ஏன் போலீசிடம் பயம்!
கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை பேங்கில் கொடுக்க உனக்கு மனமில்லை... எனவே இப்போது நீயும் ஒரு கொள்ளைக்காரன்தான்..
ஏய்.. வாயை அடக்கு!



அப்படியானால் பணத்தை பேங்கில் சேர்க்காமல் ஏன் ஹோட்டலில் வேறு பெயரில் தங்கினாய்?...ஏன் என் போன்ற கொள்ளைக்காரனைப் பார்த்து பயந்து இப்படி ஓடவேண்டும்? உனக்கும் பணம் வேண்டும். அதுதான் உண்மை. சுற்றி வளைப்பானேன்..



....பணத்தை ஆளுக்குப்பாதி பிரித்து எடுத்துக் கொண்டு ஆளுக்கொரு பக்கமாக ஓடி விடுவோம். இதற்குச் சம்மதிக்கா விட்டால் நீ ஒரு முட்டாள்தான்!


கிரியின் பொறுமை எல்லை மீறியது. சடாரென்று துடுப்பை எடுத்து ஓங்கி வீசியடிக்கிறான்
யாரடா முட்டாள்?.. இதோ வாங்கிக் கொள், முட்டாளே!
படுபாவி... ஒழியட்டும்!


சந்திவேலின் தலையில் கசிந்த இரத்தம் கடலில் கலந்த மறுவினாடி பசி நிறைந்த சுறாமீன்கள் பாய்ந்து வந்தன—
ஆ.. சுறாமீன்கள்.. என்னைக் காப் பாற்று.. எனக்குப் பணம் வேண்டாம்...
..எல்லா வற்றையும் நீயே எடுத்துக் கொள்..!


உள்ளத்தைக் கல்லாக்கிக்கொண்டு படகை நகர்த்தினான் கிர்—
ஆ!


பெட்டியுடன் தன் ஓட்டல் அறைக்குத் திரும்பினான்—
பணம்.. சே! என்ன பணம்!... ஒரு உயிரைப் பலிகொண்டு விட்டது...


அறையில் உட்கார்ந்து பலவாறு சிந்திக்கிறேன்.
கொள்ளையடிக்கப் பட்ட பணம் என் நேர்மை யைக் கொள்ளையடித்து விட்டது..
..யாருக்கும் அது நன்மை செய்யாது மேலும் பல உயிர் களைத்தான் குடிக்கும்!
ஆம்..என் மனம் தெளிந்து விட்டது!
நாளை போலீசா ரிடம் சென்று பணத்தை ஒப்படைத்து, நடந்ததையெல்லாம் விளக் கிச் சொல்லிவிட்டு, அவர்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான்!


மறுநாள் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் கிரி—
நேற்றுக்கு முந் தின நாளே பணத்தைக் கொண்டு வராததால் இப்போது என்மீது சந் தேகப் படுவார்கள்...
இதோ நயாகரா பேங்க்கில் கொள்ளை யடிக்கப் பட்ட பணம்!. நான் அங்கு பணி புரியும் துப்பறிவாளன், கிரி.
வெல்டன் கிரி! விடாமல் இரண்டே நாட்களுக் குள் பணத்தை மீட்டு வந்து விட்டாயே! நீ சிறந்த வீரன்! யூ ஆர் கிரேட்!
தாங்க்ஸ், ஸார்!
அப்படியானால்... என்னை... அவர்கள்...?


அவன் உன்னைக் கொன்றிருப்பான் என்று நாங்கள் பயந்தோம்...
ஆனால் நீ அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டு வந்திருக்கிறாய்!
இனி உண்மையைச் சொல்வது சரியல்ல என முடிவு செய்தான்-
இளம் வீரனே! உனக்குப் பரிசும் பாராட்டுக்களும் மட்டுமல்ல, உயர்ந்த பதவியும் காத்திருக்கிறது! கன்கிராட்ஸ்!
தாங்க்யூ, ஸார்!
ஓ! கடவுளே!


சில நாட்களில் கிரிக்கும் அவன் காதலி மதுமதிக்கும் திருமணம் நடக்கிறது -
கிரி இப்போது நகரத்தின் தலைமைத் துப்பறிவாளனாகிவிட்டான்! ...புகழ் வேறு!..அழகிய மனைவி!
அதெல்லாம் அவனுடைய நேர்மைக்குக் கிடைத்த பரிசுகள்!



மறுநாள் கிரியின் பங்களாவில் டெலிபோன் அலறியது -


ஹலோ சீஃப் டிடெக்டிவ் கிர் ஸ்பீக்கிங்!
ஓ! புதுப் பணக்காரனா? ... நான்.. சக்திவேல் பேசுகிறேன்!
சக்திவேலா?..அவனைத் தான் சுறாமீன் தின்று விட்டதே!?
என் கணுக் காலை மட்டும் தான் தின்றது! உன் துரதிர்ஷ் டமோ, என் அதிர்ஷ்டமோ, நான் பிழைத் துக் கொண் டேன்!


என்னைப் நம்ப முடிய வில்லை!.. சரி எதற்காகப் போன் செய் கிறாய்?
என்ன இப்படிக் கேட்டு விட்டாய்? எனக்கு ஏராளமான பணம் தேவைப்படுகிறதே!
அடடே உனக்கு விஷயம் தெரியாது போலிருக்கே!.. அந்தப் பணத்தை யெல்லாம் போலீசாரிடமே ஒப்படைத்து விட்டேன். இனி உன் மிரட்ட லெல்லாம் செல்லுபடி யாகாது!


கொள்ளையடிக்கப்
பட்ட பணம் கையில்
கிடைத்தபோது, நீ
சுருட்டிக்கொள்ளப்
பார்த்தாய், அதை
அதிகாரிகள் தெரிந்து
கொண்டால்...
உன்னை
யாரும்
நம்ப
மாட்
டார்கள்
தம்பி!
நீ பணப்பெட்டியுடன்
மாறு பெயரில் ஹோட்டல்
அறையில் தங்கியதை நிரூ
பித்தால் கூடவா
நம்பமாட்டார்கள்!...
ஹஹ் ஹா ஹா..!


கிர்க்கி வியர்க்கிறது -
சரி.. உனக்கு என்ன வேண்டும், இப்போது?
பத்து லட்சரூபாய்!.. உடனே! பிறகு நான் சிங்கப்பூருக்குப் போய்விடுவேன்!.. புகழ்... பதவி பணக்கார மனைவி எல்லாவற்றையும் இழக்க உனக்குப் பிடிக்காது என்று நம்புகிறேன்!
இன்னும் ஒரு மணி நேரத்தில் பணத்துடன் வைட் ஹில் பக்கத்தி உள்ள பாலத்திற்கு வா.. பணத்துடன்!


கிர் அந்தப் பாலத்தை அடைந்த போது—
அதோ நிற்கிறான் அந்தப் பாவி!



காரை நிறுத்தி இறங்கி வருகிறான்—
வந்து விட்டாயா? நீ உண்மையிலேயே புத்திசாலிதான்!


சரி, பணத்தைக் கொண்டுவந் தாயா?
சீ.. இதோ..


..இதைத்தான் கொண்டுவந்தேன் போதுமா?
இது முட்டாள் தனம்!



என்னைக் கொன்றால் இந்த நிமிஷம்கூட என் சகாக்கள் சாட்சியாக இருக்கிறார்கள்! இந்த கால் உன்னைமூன்றவனைக் கொலைசெய்ததை போலீசாரிடம் தெரிவித்து விடுவார்கள்!


நான் ஏன் உன்னைக் கொலை செய்ய வேண்டும்! உன்னைப் போலீசில் ஒப்படைக்கப் போகிறேன்.


அது இன்னும் முட்டாள்தனம்! உன் வண்டவாளத் தைப் போலீசுக்குச் சொல்லிவிடு வேன்!
உன்னைப் போன்ற சொறி நாய் களுக்குப் பயந்து வாழ் வதைவிட நானே உண்மை களைப் போலீசிடம் சொல்லி விடுவது மேல்



கிர்.. உனக்கு என்ன வைத்தியமா? அற்புதமான வாழ்க்கை யைப் பாழாக்..
சரிதான், காரில் ஏறுடா முண்டம்! எனக்கு எல்லாம் தெரியும்!



நல்லா யோசித்து முடிவெடு! உணர்ச்சி வசப் படாதே!
கார் பறக்கிறது-
உன்னைப் புகழ்ந்து வாய்ப்புகளை இருக்கும்... உன் முடிவை மாற்றிக்கொள்!


இவன் சொல்வது சரிதான்.. இவனைப் போலீசிடம் அழைத்துச் செல்லாமல் இங்கேயே ஒழித்துக் கட்டிவிட வேண்டும்!
ஆமாம்! என் முடிவை மாற்றிக்கொள்கிறேன், சக்திவேல்!
?


அதோ வரும் வளைவை ஒட்டிய பள்ளத்தாக்கில் இவனைத் தள்ளிவிட்டு விடலாம்.


சட்டென்று கார் கதவைத் திறந்து சத்தியவைத் தள்ளி—
ஒழிந்து போ!
அது நடக்காது!
ஸ்டியரிங் வீலை விடடா முட்டாள்.. கார் தடம் புரண்டு பள்ளத்தில் விழுந்து விடும்....
விடமாட்டேன்! இரண்டு பேரும் செத்துப் போவோம்!


அந்தப் போராட்டத்தின் விளைவாகக் கார் பள்ளத்தில் பாய்கிறது—


கார், கீழே இருந்த தண்டவாளத்தின் குறுக்கே போய் விழுந்தது-
அம்மாடி... பிழைத்தேன்...
அப்பாடா... உயிருக்கு ஆபத்தில்லை... தப்பினேன்...



அப்போது-
ஐயோ... ரயில் வருகிறது... இது பயங்கரம்...


நான்கு கதவுகளும் சிக்கிக்கொண்டதை உணர்ந்த கீர் ஜன்னல் வழியாகக் குதித்தான். ஆபத்து என்றதும் சக்திவேல் மீது இரக்கம் பிறந்தது—
ம்.. சீக்கிரம்... ஜன்னல் வழியாகக் குதி...
ஐயோ என் கட்டைக் கால்....
சீக்கிரம்.. ஐயோ!
கால் சிக்கிக் கொண் டிருக் கிறது!
முடியல் லியே!


கடைசிவரை
ஒரே பாய்ச்சலில் தோற்றுப்
போய் விடுகிறான்-
இனி என்னைக்காப்
பாற்றிக்கொள்ளவேண்டும்..
பாவம், அவன் விதி முடிந்தது!


சே! மனதை
ஏதோ குடை
கிறது... மனசே
சரியில்லே...


டாக்ஸி பிடித்து
வீடு வந்தார்—
முதலில்
மதுமதி
யிடம்
எல்லா
உண்மை
களையும்
சொல்லி
விட்டால்..
..மனதில்
பாதி
சுமை
இறங்கி
விடும்..


அப்பாடா! நான் பயந்தே போனேன்! ஏன் இவ்வளவு நேரம்?.. என்ன நடந்தது, கிரி?
நிறைய சம்பவங்கள் நடந்துவிட்டன. விளக்கமாகச் சொல்கிறேன் கேள்...



எல்லோரும் எனக்கு வழங்கும் பாராட்டுகளுக்குத் தகுதியற்றவன், நான்!
ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறீர்கள்? என்ன ஆயிற்று உங்களுக்கு?


நடந்த எல்லா உண்மைகளையும் சொல்கிறன்—
பணத்தாசை கொண்டு எவ்வளவு பெரிய தப்பு செய்யவிருந்தேன் பார்த்தாயா, மது! இப்போது நீ என்னை வெறுத்தால் ஆச்சரியப் படமாட்டேன்.
இல்லை.. உங்களை இப்போது இன்னும் அதிகமாக நேசிக்கிறேன்!
மனிதன் உள்ளத்தில் சலனம் ஏற்பட்டால் குற்றம் செய்கிறான். நீங்களோ குற்றம் செய்யுமுன்பே திருந்திவிட்டீர்கள்.
மதுமதி, உனக்கு எவ்வளவு உயர்ந்த உள்ளம்!
தவறை உணர்ந்தவர்கள் இன்னும் உயர்ந்தவர்கள், கிரி!


திடீரென்று வீட்டுக் குள் இரண்டு தடியர்கள் புகுந்து—
யார் நீங்கள்?
சக்திவேலின் சகாக்கள் நாங்கள்... புரிந்ததா?
அவன் செத்ததை நாங்கள் பார்த் தோம். அதற்கு நீதான் காரணம். தப்பிக்க வேண்டு மானால்...
...எங்களுக்குப் பத்து லட்சம் கொடு!


பணமா வேணும்? இந்தா!
இந்தா உனக்கும்!
இருவரையும் கட்டிப் போட்டான்
இப்போ போலீஸ் வந்து கூட்டிட்டுப் போய் இன்னும் பணம் தருவாங்க. பணம்!


மறுநாள் போலீஸ் கமிஷனரிடம் கிரி எல்லா உண்மைகளையும் சொல்லி விடுகிறான் —
தவறைக் கண்டுபிடித்த பின் மன்னிப்புப் பெற்றுத் திருந்தியவர்கள் பலருண்டு. நீ தானாக, பகிரங்கமாக குற்றத்தை ஒப்புக்கொண்ட உயர்ந்த உள்ளம் கொண்டவன்.. உன்னை மேலும் பாராட்டுகிறேன்!
இதனால் உன் புகழும் மதிப்பும் மேலும் உயர்ந்து விட்டது, கிரி!
நன்றி! இப்போது தான் எனக்கு நிம்மதி, சார்!
வெளியே வருகிறான். அவன் உள்ளம் லேசாகி விட்டிருக்கிறது —
நெஞ்சிலுள்ள சுமையை இறக்கி விட்டேன்...
இனி ஒருபோதும் சபலத்துக்கு இடம் கொடுக்க மாட்டேன்!
முற்றும்


ராணி
காமிக்ஸ்
இரவுக் கழுகுகள்
இதழ் 7
படக்கதை
ரூ.1-50